## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

# திட்டப் பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கையின் பொதுக் கல்வி முறைமைக்குள் டிஜிட்டல் கல்வியைச் செயற்படுத்துவதற்கு வசதியாக ஒரு முறைசார்ந்த மின்-கற்றல் கட்டமைப்பை (e-Learning Framework) அறிமுகப்படுத்துவதற்கும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் (ICT) கல்விக்கான ஒரு விரிவான திட்டத்தை நிறுவுவதற்கும், கொரியன் EXIM வங்கியின் நிதி உதவியுடன் இலங்கை அரசாங்கம் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. ''இரண்டாம் நிலைக் கல்விக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுதல் (GOSL/EDCP)-SRI-31" என்ற தலைப்பிலான இத்திட்டத்தின் கீழ் 27 மாத ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

| பதவி | சம்பள அளவு | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| திட்டப் பணிப்பாளர் | A | 1 |
| பெறுகை நிபுணர் | C | 1 |
| நிதி முகாமையாளர் | C-1 | 1 |
| சிரேஷ்ட பொறியியலாளர் | D | 1 |
| திட்ட அதிகாரி | F | 1 |
| தொழில்நுட்ப அதிகாரி | F | 1 |
| திட்ட முகாமைத்துவ உதவியாளர் | 02/2026 (3:2:3) இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் | 3 |
| அலுவலக உதவியாளர் | | 1 |
| சாரதி | | 1 |

**அனைத்துப் பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்**

1. **தகுதிகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் :** https://moe.gov.lk என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2. **சம்பளம் :** கொடுப்பனவுகள் 2026 மார்ச் 28ஆம் திகதிய 02-2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் விதிகளுக்கு அமைவாக வழங்கப்படும்.

3. **வேலைவாய்ப்பு நிபந்தனைகள் :**

   அ. திட்டத்தின் தேவைகள் மற்றும் செயல்திறனின் அடிப்படையில் புதுப்பிக்கப்படுதலுக்கு உட்பட்டு, 27 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

   ஆ. அரசாங்க உத்தியோகத்தர்கள் பின்வரும் வகையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்:
   - திட்டப் பணிப்பாளர் பதவிக்கு: முழுநேர விடுவிப்பு அடிப்படையில்.
   - ஏனைய பதவிகளுக்கு: ஒப்பந்த நிபந்தனைகளின் கீழ், அவர்களின் வழக்கமான சேவைக்கு வெளியில் இரண்டாம் நிலை அடிப்படையில் (secondary basis).

   இ. விண்ணப்பதாரர்களின் தகுதிகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும் பட்டியலிடப்பட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

   ஈ. விண்ணப்பதாரர்கள் தங்களின் சுயவிவரக் குறிப்புடன் (Curriculum Vitae) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவங்களின் சான்றுபடுத்திய பிரதிகள் மற்றும் உறவினரற்ற இரு பரிந்துரையாளர்களின் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இவைகளை 2026 ஆகஸ்ட் 29ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்: செயலாளர், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் ''இரண்டாம் நிலைக் கல்விக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**<br>
**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,**<br>
**இசுறுபாய,**<br>
**பெலவத்த,**<br>
**பத்தரமுல்ல.**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED